Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.385/2021

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரவீந்திரன் | Occupation | வியாபாரம் |
| Father's name | ராஜாமணி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of August 2026.

06.08.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் செல்போன் சர்வீஸ் சென்டர் வைத்து தொழில் செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும் அவர் எனது பக்கத்து தெருக்காரர். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 09.06.2021 அன்று காலை 06.00 மணியளவில் நானும் சுப்பையா என்பவரும் கல் பட்டறை அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது அசா.1 பால் வாங்கிவிட்டு நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை தாண்டி தீர்த்தவாரி மண்டபம் அருகே சென்றபோது ஒரு நபர் கருப்பு கலர் மாஸ்க் போட்டு திடீரென்று அசா.1 கழுத்தில் போட்டிருந்த செயினை அத்துவிட்டு பட்டறை வழியே ஓடி கிழக்காமல் ஓடினார் என்றும் அசா.1

**சத்தம்போடவும் அங்கிருந்தவர்கள் எதிரியை தேடி சென்றார்கள் என்றும் இதுசம்மந்தமாக அசா.1 புகார் கொடுத்ததை தெரிந்து கொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |